

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து நேற்று முன்தினம் (15.08.2024) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் கீழ்பவானி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தார்கள்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், சட்டமன்ற உறுப்பினர்கள் (அந்தியூர்) ஏ.ஜி.வெங்கடாசலம், (மொடக்குறிச்சி) திருமதி.சி.சரஸ்வதி, (அரவக்குறிச்சி) ஆர்.இளங்கோ, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.நவமணி கந்தசாமி உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 238 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெறும்விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மரக்காணம் இரு வழி சாலையை நான்கு வழி சாலையாக தரம் உயர்த்தி தார் சாலை அமைக்கும் பணியைசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு மேற்கொண்டார்.உடன் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் திண்டிவனம் கவிதா,விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், மரக்காணம் ஒன்றிய துணை சேர்மன் பழனி ஆகியோர் உள்ளனர்.

## பவானி சாகர் அணையிலிருந்து

# விவசாயிகள் நலனுக்காக 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது!

## அமைச்சர்கள் சு.முத்துசாமி – மு.பெ.சாமிநாதன் பேட்டி!

ஈரோடு, ஆக.17-

ஈரோடு மாவட்டம், பவானி சாகர் அணையிருந்து விவசாய பாசனத்திற்காக 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்று பவானி சாகர் அணையை திறந்து வைத்து அமைச்சர்கள் .முத்துசாமி - மு.பெ.சாமிநாதன் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்து சாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

முதலமைச்சர் எல்.பி.பி. வாய்க்காலின் சீரமைப்பு பணிகளை கண்காணித்து இப்பணிகளை விரைந்து முடித்திடவும் ஆகஸ்ட் 15 அன்று தண்ணீர் திறக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்கள். அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரித நடவடிக்கை மேற்கொண்டு சீரமைப்பு பணிகளை முடித்து தண்ணீர் திறந்துவிடும் அளவிற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் முதல்போக பாசனத்திற்கு பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானித்திட்ட பிரதான கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் இரட்டைப்படை மதகுகளின் நன்செய் பாசனத்திற்கு 15.08.2024 முதல் 12.12.2024 முடிய 120 நாட்களுக்கு 23846.41 மி.க. அடிக்கு மிகாமல் தேவைக்கேற்ப தண்ணீர் திறந்துவிட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி இன்றைய தினம் (15.08.2024) ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி திட்ட பிரதானக்கால்வாயில் ஒற்றைப்படை மதகுகளுக்கும் சென்னசமுத்திரம் பகிர்மானக் கால்வாயில் இரட்டைப்படை மதகுகளுக்கும் தற்போது அணையில் உள்ள நீர் இருப்பு வடகிழக்கு பருவமழை மூலம் எதிர்பார்க்கப்படும் நீர் வரத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கீழ்பவானித் திட்ட பிரதானக் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீரின் அளவு 200 கன அடி முதல் 2300 கனஅடி வரை படிப்படியாக உயர்த்தப்பட்டு 120 நாட்களுக்கு 23.846 டி.எம்.சி தண்ணீர் வழங்கப்படும். இதில் ஈரோடு மாவட்டத்தில் 91284 ஏக்கர் நிலங்களும் திருப்பூர் மாவட்டம் 10.228 ஏக்கர் நிலங்களும் கரூர் மாவட்டத்தில் 1988 ஏக்கர் நிலங்களும் என மொத்தம் 103500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அணையில் போதிய அளவு நீர் இருப்பு உள்ளது. மழையும் போதிய அளவு இருக்கிறது. எனவே இந்த தண்ணீர் விவசாயிகளுக்கு சரியான அளவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போல் விவசாயிகளின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை நிறைவு செய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர்கள் பேட்டியளித்தனர்.

# தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!



தஞ்சை, ஆக.17-

தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் அ.கல்யாண சுந்தரம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகின்ற 20.08.2024 செவ்வாய்க் கிழமை மாலை 04.00 மணியளவில் கும்பகோணம் சகாஜி தெருவில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம், மாவட்டக் கழக அவைத்தலைவர் க. நசீர் முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்திற்கு முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர செயலாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநிலக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, மாநகர பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் தவறாது குறித்த நேரத்தில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. 16.08.2024 சென்னை மாவட்ட செயலாளர்கள் கூட்ட தீர்மானம்

2. 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு ஆயத்த பணிகள்.

3. வார்டு, கிளை கழகங்களில் செயற்குழு கூட்டம் நடத்துவது குறித்து

4. மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர்களில் சார்பு அணிகள் நியமித்தல்.

5. கழக ஆக்கப்பணிகள்.

குறிப்பு:

இதுவரை OMR Sheet வழங்காத ஒன்றிய, பேரூர், பகுதி கழகங்களிலிருந்து பூர்த்தி செய்து கூட்டத்திற்கு வரும்பொழுது எடுத்துவரவும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாணயம் வெளியீட்டு விழா!

## திருவாரூர் மாவட்டச்செயலாளர் பூண்டிகே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவாரூர், ஆக.17-

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் வகையில், சென்னையில் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் கலைஞர் நினைவு நாணய வெளியீட்டு விழாவிற்கு, திருவாரூர் மாவட்ட கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ.,அழைப்பு விடுத்துள்ளார்.

அவர்தம் அறிக்கையில் கூறியுள்ளதாவது,

இந்திய அரசியலில் அன்றும், இன்றும், என்றும், தவிர்க்கமுடியாத சக்தியாக, உலக அரங்கில் தமிழையும், தமிழ் இனத்தையும், தமிழ் நாட்டையும் உயர்த்திய உத்தம தலைவர், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் அவர்களின் புகழுக்கு மேலும் ஒரு மணிமகுடமாய் ஒன்றிய அரசு வெளியிடும் "டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி நாணயம்" வெளியீட்டு விழா, தமிழ்நாடு முதலவர்,திராவிட நாயகர் தளபதி அவர்களின் சீரிய தலைமையில் சென்னை கலைவாணர் அரங்கில் 18.08.24 அன்று நடைபெறுகிறது. ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்க அவர்கள் பங்கேற்று நாணயத்தை வெளியிடுகிறார்.

ஒன்றிய நிதி அமைச்சகம் சார்பில் வெளியிடப்படும் நாணயத்தை, கலைஞர் நூற்றாண்டு நூலகம், கலைஞர் பல்நோக்கு மருத்துவமனை , கலைஞர் கோட்டம், கலைஞர் அருங்காட்சியகம், கலைஞர் நினைவிடம் உள்ளிட்ட மண்ணின் மைந்தர் கலைஞர் பெருமை போற்றும் உலகத் தரத்திலான நினவு சின்னங்களை தந்த திராவிட நாயகர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் தமது திருக்கரங்களால் பெற்றுக் கொள்கிறார். தமிழ்நாடு அரசின் அமைச்சர் பெருமக்களும் , சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்து அரசியல் இயக்க தலைவர்களும், தமிழ் சான்றோர்களும், அறிஞர் பெருமக்களும் பங்கேற்கும் இந்த வரலாற்று சிறப்புமிக்க விழாவில், மண்ணின் மைந்தர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூரில் இருந்து பெருந்திரளாக பங்கேற்று, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அந்த உத்தம தலைவருக்கு மேலும் பெருமை சேர்த்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக்கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கே.கலைவாணன் தமது அழைப்பில்தெரிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஆத்தூர்குப்பம், கத்தாரி, தோப்பலகுண்டா, சொர்க்காயல்நத்தம், நாயனசெருவு, கொத்தூர், கொண்டகிந்தனப்பள்ளி, பச்சூர், கே.பந்தாரப்பள்ளி ஆகிய ஊராட்சிகளில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.என்.அண்ணாதுரை வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

### சென்னை குடிநீர் வாரிய அலுவலகத்தில் சுதந்திர தின விழா!

சென்னை, ஆக.17-

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.08.2024) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி.வினய், தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்கள்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.08.2024) சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் டாக்டர்டி.ஜி.வினய், தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், அவர்கள், சென்னை குடிநீர் வாரியத்தில் 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற முறையில் சிறப்பாகப் பணியாற்றிய பணியாளர்களைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன் மற்றும் பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# கண்ணீர் அஞ்சலி



### சிவகங்கை மாவட்ட துணைச்செயலாளர்

## திரு. K.S. மணிமுத்து அவர்கள்



**15.08.2024 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**இப்படிக்கு : P. சசிக்குமார்பெரியசாமி**

மாவட்ட துணை அமைப்பாளர் ஆதிதிராவிடர் நலக்குழு

மற்றும்

ஆதிதிராவிடர் நலக்குழு - திமுகழகத்தினர்

சிவகங்கை மாவட்டம்